**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.**

**அசல் வழக்கு எண். 63/2024**

2026ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 06 ஆம் நாள் திங்கட்கிழமை சாட்சியாகிய கமலா **PW1.** இன் வாக்குமூலம், 2023ஆம் ஆண்டு பாரதிய சாக்ஷிய அதிநியம் சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திருமதி. P.கனிமொழி, L.L.M.,** மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 06.04.2026

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | **கமலா** | | |
| Father /Husband Name | : | **கலியமூர்த்தி** | Court | : |
| Village | : | **திருவிடைக்கழி** | Taluk | : |
| Calling | : | | | |
| Age | : | 54/2026 | | |

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**முதல் விசாரணை:**

நான் இவ்வழக்கில் வாதி மற்றும் வாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன். வழக்கு விபரங்கள் குறித்து முதன்மை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

| **எண்.** | **தேதி** | **ஆவணங்களின் விபரங்கள்** |
|---|---|---|
| 1 | 02.02.2024 | வாதி ஆசைதம்பி என்பவரிடமிருந்து கிரயம் பெற்ற கிரய ஆவணத்தின் அசல் **வாசாஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 2. | 02.06.1973 | சாஹிரா பானு மற்றும் ரெஜினா பானு ஆகியோர் கிரயம் பெற்ற கிரய ஆவணத்தின் அசல் **வாசாஆ 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |

மேலும் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.